**தமிழ்நாடு அரசு**
**நெடுஞ்சாலைத்துறை**
**மதுரை வட்டம், மதுரை– 2.**
**சிட் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**
**ஒப்பந்த அழைப்பு எண். 21/2006–1/வதொஅ/நாள் 26.2.2007**

தமிழ்நாடு ஆளுநருக்காவும், அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெடுஞ்சாலை)மதுரை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள், மதுரை அழகர்கோவில் சாலை, தாமரைத் தொட்டி அருகில் உள்ள அவரது அலுவலகத்தில் **23.3.2007** அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலகக்கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. இவ்விதம் கோரப்படும் ஒப்பந்த நமூனாக்கள் அன்றைய தினமே **23.32007** பிற்பகல் 3.15 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் முன்னிலையில் திறக்கப்பட்டு வாசிக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்த நமூனா விலை ரூ. | ஒப்பந்த படிவம் கிடைக்கு மிடம் |
|---|---|---|---|---|---|
| **COMPREHENSIVE ROAD INFRASTRUCTURE DEVELOPMENT PROGRAMME- 2006-2007** | | | | | |
| **திண்டுக்கல் (நெ)கோட்டம்** | | | | | |
| **இரண்டாம் அழைப்பு** | | | | | |
| 1. | பி.சி.சி. சாலை கி.மீ. 374/5-375/0, வரை மேம்படுத்துதல் மற்றும் கி.மீ. 378/0-379/0, வரை அகலப்படுத்துதல் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 70.00 | 45000 | 15000+ 1890 | கோட்டப் பொறியாளர் (நெ) திண்டுக்கல் |
| 2 | கோயம்புத்தூர்-திண்டுக்கல் சாலை கி.மீ. 158/635-161/0 வரை அகலப்படுத்துதல் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 85.60 | 52800 | 15000+ 1890 | கோட்டப் பொறியாளர் (நெ) திண்டுக்கல் |
| 3 | ரெட்டியார்சத்திரம்-கருப்பிமடம் சாலை கி.மீ. 4/0-6/0 வரை அகலப்படுத்துதல் | 55.50 | 37800 | 15000+ 1890 | கோட்டப் பொறியாளர் (நெ) திண்டுக்கல் |

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கோட்டப் பொறியாளர்(நெ) திண்டுக்கல் அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர்(நெ) திண்டுக்கல் அவர்களின் பெயரில் அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் கட்டணம் செலுத்தி (திருப்பித் தரப்படமாட்டாது) செலுத்துச் சீட்டினை அவ்வலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் **20.3.2007** வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது ஏஜெண்ட் மூலமாகவோ விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெடியூல்டு வங்களிலிருந்து கோட்டப் பொறியாளர்(நெ) திண்டுக்கல் பதவி பெயரில் எடுக்கப்பட்ட கேட்புவரை வேலை வடிவத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| Cost of Tender Document each For Sl.No.1-3 – Rs 15000 | 8658 Highways suspense account III other receipts to the credit of the Divisional Engineer (Highways) Dindigul |
| Sales Tax and Surcharge each For Sl.No. 1-3 – Rs 1890 | 0040 Sales Tax and Surcharge |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பதிவு அஞ்சலிலோ கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு நமூனாவுக்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது இணைத்து அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் மேற்கூறிய முறையில் அனுப்பி வைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு கோட்டப் பொறியாளர் திண்டுக்கல் (நெடுஞ்சாலை) எந்தவிதத்திலும் பொறுப்பு ஏற்க மாட்டார்கள்.

சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ, தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப் பொறியாளர்(நெ)மதுரை அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளான **23.3.2007** அன்று பிற்பகல் **3.00** மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர், அஞ்சல் அல்லது தனிநபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எவ்வகையிலும் பொறுப்பு ஏற்காது..

**குறிப்பு**

1. மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிசர் இயந்திரம் சொந்தமாக வைத்திருந்து இத்துறையில் முதல் வகுப்பு மாநில அளவில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்த நமூனா வழங்கப்படும். ஒப்பந்த நமூனாக்கள் கோரும் போது ஒப்பந்தக்காரர்கள் மேற்கண்ட கருவி தளவாடங்கள் சொந்தமாக வைத்திருப்பதற்கான ஆவணங்கள் வரிசை எண்.3 தவிர அளித்தால் மட்டுமே ஒப்பந்த நமூனா வழங்கப்படும்.

2. நடப்பு ஆண்டு விள்பனை வரி செலுத்தியதற்கான நிலுவையில்லா சான்றிதழை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. மேற்காணும் சாலைகள் மற்றும் வேலைகள் பற்றிய விபரங்களுக்கு நெஞ்சாலை கோட்டப் பொறியாளர் திண்டுக்கல் தொடர்பு கொள்ளலாம்.

**கண்காணிப்புப் பொறியாளர்**
**(நெடுஞ்சாலை)மதுரை**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**கண்காணிப்புப் பொறியாளருக்காக,**
**(நெடுஞ்சாலை)மதுரை**